DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: STC.443/2026**

Prosecution witness **PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Arunachalam | Caste | : | |
| Father Name | : | Govindasamy | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 23 |
| Time | : | | | | |

**(A1, A2 present. )**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **19.06.2026**

**19.06.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது குன்னூர் மோர்ஸ் கார்டன் சந்திரா காலனியில் குடியிருந்து சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 15.03.2026 ம் தேதியில் மாலை 06.00 லிருந்து 06.30 மணிக்குள் நான் மோகன் என்பவருடன் ஸ்கூட்டியில் ஓட்டுப்பட்டறையிலிருந்து எனது வீடு உள்ள சந்திரா காலனிக்கு வந்துகொண்டிருந்தேன். எனது வீட்டிற்கு மேலே மாகாளியம்மன் கோவில் அருகே வந்துகொண்டிக்கும் போது எதிரிகள் இருவரும் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள்.

2. அந்த இடத்தில் நாங்கள் எங்களது வாகனத்தை நிறுத்தினோம். உடனடியாக 1ம் எதிரி என்னை பார்த்து தாயோழி மகனே எதுக்குடா என் பொண்டாட்டிகிட்ட பேசுற என கெட்ட வார்த்தையால் திட்டினார். பின்பு கையால் எனது வலது கன்னத்தில் 1ம் எதிரி அடித்தார். அப்போது எனது பக்கத்திலிருந்த மோகன் எதற்காக அடிக்கிறாய் என கேட்டதற்கு அதற்குள் பக்கத்திலிருந்த நவீன் போன்றவர்கள் வந்து தடுத்து விட்டார்கள். அதற்குள் மோகன் எனது அம்மா ரத்தினவள்ளிக்கு போன் செய்தார். எனது அம்மாவும் மேலே வந்து என்ன பிரச்சனை என கேட்டார்கள். எனது அம்மாவிடமும் 2ம் எதிரி உனது

பிள்ளையை ஒழுங்காக வளர்த்திருக்கிறாயா, தேவுடியா மகனை இந்த மாதிரி வளர்த்திருக்க என்று கெட்ட வார்த்தையால் பேசினார். நான் எனக்கு வலி அதிகமானதால் எனது அண்ணன் விஷ்ணுவுடன் குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன்.

3. போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரிக்க வந்த போது நான் மது அருந்தியிருந்ததால் என்னால் வாக்குமூலம் கொடுக்க இயலவில்லை. அதனால் அதற்கு மறுநாள் 16ம் தேதி குன்னூர் நகர காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – இல்லை

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.